*பிரஸார் பாரதி*
*அகில இந்திய வானொலி, சென்னை*
*02 09 2025 TUESDAY 6.30 PM*
*வணக்கம்-மாநிலச் செய்திகள்*

***தலைப்புச் செய்திகள்***

*1. மக்களை மையமாக கொண்ட மத்திய அரசின் திட்டங்களால், நகர்ப்புறங்களுக்கும், கிராமப்புறங்களுக்கும் இடையேயான இடைவெளி குறைந்து வருவதாக குடியரசுத்தலைவர் திருமதி. திரௌபதி முர்மு தெரிவித்துள்ளார்.*

*2. செமிகண்டக்டர் துறையில் சிறு குறு நடுத்தர தொழில் நிறுவனங்களுக்கும். புத்தொழில் நிறுவனங்களுக்கும் மத்திய அரசு ஊக்கமளித்து வருவதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.*

*3. தமிழகத்தில் தொழில் வளர்ச்சி தொடர்ந்து அதிகரித்து வருவதாக மாநில அரசு தெரிவித்துள்ளது.*

*4. அஇஅதிமுக மீண்டும் ஆட்சி அமைத்தால் வேளாண் மற்றும் தொழில்துறை வளர்ச்சிக்கு முக்கியத்துவம் அளிக்கப்படும் என்று அக்கட்சியின் பொதுச் செயலாளர் திரு எடப்பாடி பழனிசாமி கூறியுள்ளார்.*

*5. தமிழகத்தின் சில இடங்களில் அடுத்த 24 மணி நேரத்தில் லேசானது முதல் மிதமான மழை பெய்ய வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.*

*>>>>><<<<<*

*மக்களை மையமாக கொண்ட மத்திய அரசின் திட்டங்களால், நகர்ப்புறங்களுக்கும், கிராமப்புறங்களுக்கும் இடையேயான இடைவெளி குறைந்து வருவதாக குடியரசுத்தலைவர் திருமதி. திரௌபதி முர்மு தெரிவித்துள்ளார்.*

*சென்னையில் இன்று நடைபெற்ற City Union வங்கியின் 120வது ஆண்டு நிறுவன தின நிகழ்ச்சியில் பங்கேற்றுப் பேசிய அவர், நாட்டின் பொருளாதார வளர்ச்சியில் வங்கித் துறை முக்கியப் பங்காற்றி வருவதாக கூறினார்.*

*தற்போது கைபேசி மூலமாகவே வங்கிச் சேவைகளை பெற முடிவதால். மக்களின் வாழ்க்கை எளிதாகியுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.*

*56 கோடி ஜன்தன் வங்கிக் கணக்குகள் தொடங்கப்பட்டிருப்பதன் மூலம், கிராமப்புற மக்களின் வாழ்வில் பெரும் மாற்றம் ஏற்பட்டுள்ளதாகவும், இதனால், இடைத்தரகர்களின் தலையீடு தவிர்க்கப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.*

*வளர்ச்சியடைந்த இந்தியாவை கட்டமைப்பதில் வங்கித்துறைக்கு முக்கியப் பங்கு உள்ளதாக திருமதி. திரௌபதி முர்மு தெரிவித்தார்.*

*இந்நிகழ்ச்சியில் பேசிய மத்திய நிதியமைச்சர் திருமதி. நிர்மலா சீதாராமன், பிரதமர் திரு. நரேந்திர மோடி தலைமையிலான மத்திய அரசின் நடவடிக்கைகளால் நாட்டின் பொருளாதாரம் வலுவாக உள்ளது என்று கூறினார்.*

*நடப்பு நிதியாண்டின் முதல் காலாண்டில், பொருளாதார வளர்ச்சி ஏழு புள்ளி எட்டு சதவீதமாக உள்ளது என்று அவர் தெரிவித்தார்.*

*கடந்த எட்டு ஆண்டுகளில் பணவீக்கம் மிகக் குறைந்த அளவாக ஒன்று புள்ளி ஐந்து சதவீதமாக பதிவாகியுள்ளதாகவும் அவர் கூறினார்.*

*ஜன்தன் வங்கிக் கணக்குகளில் 67 சதவீதம் கிராமப்புற பகுதிகளில் தொடங்கப்பட்டுள்ளதாகவும், இதில் 56 சதவீதம் பேர் மகளிர் என்றும் திருமதி. நிர்மலா சீதாராமன் தெரிவித்தார்.*

*இந்நிலையில், குடியரசுத் தலைவர் திருமதி. திரௌபதி முர்மு, நாளை திருவாரூர் மற்றும் திருச்சிக்கு செல்லவுள்ள நிலையில், அங்கு பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.*

*(வாய்ஸ் பைட் - கதிரவன் 50 செகண்ட்ஸ்)*

*>>>>><<<<<*

*செமிகண்டக்டர் துறையில் சிறு குறு நடுத்தர தொழில் நிறுவனங்களுக்கும். புத்தொழில் நிறுவனங்களுக்கும் மத்திய அரசு ஊக்கமளித்து வருவதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.*

*புதுதில்லியில் இன்று SEMICON இந்தியா மாநாட்டை தொடங்கி வைத்துப் பேசிய அவர், இத்துறை சார்ந்த நிபுணர்கள் இந்தியாவில் அதிக அளவில் உள்ளதாக தெரிவித்தார்.*

*செமிகண்டக்டர் துறையின் வளர்ச்சிக்கு மத்திய அரசு துணை நிற்கும் என்றும் அவர் உறுதியளித்தார்.*

*உற்பத்தியுடன் இணைந்த ஊக்கத்தொகை திட்டத்தால், இத்துறை சார்ந்த நிறுவனங்கள் பெரிதும் பயனடையும் என்று அவர் குறிப்பிட்டார்.*

*பல்வேறு மாநில அரசுகள், செமிகண்டக்டர் துறையின் வளர்ச்சிக்கு ஊக்கமளித்து வருவதாகவும், இதுதொடர்பாக சிறப்பு கொள்கைகளை வகுத்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.*

*மாநிலங்கள் ஆரோக்கியமான போட்டித் தன்மையுடன் இத்துறையின் வளர்ச்சிக்கு பங்களிக்க வேண்டும் என்றும் திரு. நரேந்திர மோடி கேட்டுக் கொண்டார்.*

*இந்த மூன்று நாள் மாநாட்டின் ஒரு பகுதியாக நாளை நடைபெறவுள்ள தலைமைச் செயலதிகாரிகள் வட்டமேசை கூட்டத்திலும் பிரதமர் பங்கேற்கவுள்ளார்.*

*>>>>><<<<<*

*தமிழகத்தில் தொழில் வளர்ச்சி தொடர்ந்து அதிகரித்து வருவதாக மாநில அரசு தெரிவித்துள்ளது.*

*அரசின் திட்டங்கள் மற்றும் தொழில்வளர்ச்சி தொடர்பாக, தலைமைச்செயலகத்தில் நடைபெற்ற செய்தியாளர்கள் சந்திப்பில் பேசிய நிதியமைச்சர் திரு. தங்கம் தென்னரசு, மாநிலத்தின் நிதி ஸ்திரத்தன்மை வலுவாக உள்ளது என்று கூறினார்.*

*(சவுண்ட் பைட் – தங்கம் தென்னரசு 43 செகண்ட்ஸ்)*

*இந்த செய்தியாளர் சந்திப்பில் பேசிய மாநில மின்துறை அமைச்சர் திரு. சிவசங்கர், ஸ்மார்ட் மீட்டர் பொருத்தும் பணி நிறைவடைந்ததும், மாதந்தோறும் மின் கணக்கீடு செய்யும் முறை அமல்படுத்தப்படும் என்று தெரிவித்தார்.*

*>>>>><<<<<*

*தமிழகத்தில் அஇஅதிமுக மீண்டும் ஆட்சி அமைத்தால் வேளாண் மற்றும் தொழில்துறை வளர்ச்சிக்கு முக்கியத்துவம் அளிக்கப்படும் என்று அஇஅதிமுக பொதுச் செயலாளர் திரு எடப்பாடி பழனிசாமி கூறியுள்ளார்.*

*மதுரையில் தொழில், வர்த்தக சங்க பிரதிநிதிகளுடன் நடைபெற்ற கலந்துரையாடல் கூட்டத்தில் இன்று அவர் பங்கேற்றார்.*

*முந்தைய அஇஅதிமுக ஆட்சியில் சிறு, குறு, நடுத்தர தொழில்கள் வளர்ச்சிக்கு அதிக முக்கியத்துவம் அளிக்கப்பட்டதாக அவர் கூறினார்.*

*அஇஅதிமுக ஆட்சியில் முதலீட்டாளர்கள் மாநாடு நடத்தி முதலீடுகள் ஈர்க்கப்பட்டதாக அவர் குறிப்பிட்டார்.*

*விவசாயிகளின் நலன்களைக் காக்கவும் அஇஅதிமுக ஆட்சிக் காலத்தில் முன்னுரிமை அளிக்கப்பட்டதாக திரு. எடப்பாடி பழனிசாமி தெரிவித்தார்.*

*>>>>><<<<<*

*ஐயா வைகுண்டர் பற்றி தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் ஆங்கிலக் கேள்வியில் தவறாகக் குறிப்பிடப்பட்டது கடும் கண்டனத்திற்குரியது என்று பிஜேபி மாநிலத் தலைவர் திரு நயினார் நாகேந்திரன் கூறியுள்ளார்.*

*சமூக வலைதளத்தில் அவர் வெளியிட்டுள்ள பதிவில், மக்களால் தெய்வமாகப் போற்றப்படும் ஐயா வைகுண்டரின் பெயரை தவறாக சித்தரித்ததை ஏற்க முடியாது என தெரிவித்துள்ளார்.*

*இந்தத் தவறைச் செய்தவர்கள் கண்டிக்கப்பட வேண்டும் எனவும் இதேபோன்ற தவறு மீண்டும் நிகழாமல் இருக்க மாநில அரசு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் திரு நயினார் நாகேந்திரன் வலியுறுத்தியுள்ளார்.*

*>>>>><<<<<*

*தமிழகத்தின் ஓரிரு இடங்களில் லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும் என்று சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குநர் திரு. செந்தாமரைக்கண்ணன் கூறியுள்ளார்.*

*எமது செய்தியாளரிடம் பேசிய அவர் இதனை தெரிவித்தார்.*

*(சவுண்ட் பைட் – செந்தாமரை 55 செகண்ட்ஸ்)*

*>>>>><<<<<*

*<u>மாவட்டச் செய்திகள்</u>*

*மதுரை மாவட்டம், செட்டிகுளத்தில் தரம் உயர்த்தப்பட்ட அரசு மேல்நிலைப் பள்ளியை மாநில அமைச்சர்கள் திரு அன்பில் மகேஷ் பொய்யாமொழி மற்றும் திரு.மூர்த்தி ஆகியோர் தொடங்கி வைத்தனர்.*

*>>>>><<<<<*

*மாநில அரசின் நிமிர்ந்து நில் திட்டம் தொடர்பான உயர்நிலை ஆலோசனைக் கூட்டம், புதுக்கோட்டையில் மாவட்ட ஆட்சியர் திருமதி. அருணா தலைமையில் நடைபெற்றது.*

*>>>>><<<<<*

*தூத்துக்குடியில் தேசிய சட்டப்பணிகள் ஆணைக்குழு மற்றும் தமிழ்நாடு சமரச தீர்வு மையத்தின் சார்பில் சமரச தீர்வுகள் தொடர்பான விழிப்புணர்வுப் பேரணி இன்று நடைபெற்றது.*

*>>>>><<<<<*

*திருவண்ணாமலையில் தீயணைப்புத் துறையின் சார்பில் பேரிடர் மேலாண்மை ஒத்திகை நிகழ்ச்சி இன்று நடைபெற்றது.*

*>>>>><<<<<*

*பெரம்பலூரில் அரசியல் கட்சி பிரதிநிதிகள் முன்னிலையில் மின்னணு வாக்குப்பதிவு இயந்திர கிடங்கை ஆட்சியர் திருமதி. மிருணாளினி ஆய்வு செய்தார்.*

*>>>>><<<<<*

*விருதுநகர் அருகே வாகன சோதனையின் போது ஐந்து கிலோ கஞ்சாவை பறிமுதல் செய்த காவல்துறையினர் மூன்று பேரைக் கைது செய்துள்ளனர்.*

*>>>>><<<<<*

*<u>விளையாட்டுச் செய்திகள்</u>*

*இந்தோனேஷிய சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் Maan Kesharwani காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.*

*Bali-யில் நடைபெற்று வரும் இப்போட்டியின் ஆடவர் ஒற்றையர் பிரிவு முதல் சுற்று ஆட்டத்தில் அவர், 2-6, 7-5, 6-2 என்ற செட்கணக்கில் இந்தோனேஷியாவின் Tegar Wibowo-வை வென்றார்.*

*>>>>><<<<<*

*மயிலாடுதுறை அருகே சீர்காழியில் நடைபெற்ற மாநில அளவிலான மகளிர் கபடி போட்டியில், அந்தியூர் அணி முதலிடம் பெற்றது.*

*ஒட்டன்சந்திரம் அணி இரண்டாவது இடத்தையும், திருவண்ணாமலை மூன்றாவது இடத்தையும் பிடித்தன.*

*>>>>>END<<<<<*